**இசை:** ஸ்ரீகுகன்   **பாடியவர்:** மேஜர் சிட்டு
**வரிகள்:** வேலணையூர் சுரேஸ்

தொகையறா
மூசுமலை மீதிலேறி... போய் வெடித்தவன்
நீரில் மூன்று கடற்கலங்களையும் மூழ்கடித்தவன்
தேசமெங்கும் அவன் பெயரை உச்சரித்திடும் - எங்கள்
இளங்கோ என்றே சொல்லிச் சொல்லி விழி சொரிந்திடும்...
(இசை)

பல்லவி
மூசுமலை பேசவில்லையோ துறைமுகத்தில்
அனலெழுந்து வீசவில்லையோ
(இசை)
மூசுமலை பேசவில்லையோ துறைமுகத்தில்
அனலெழுந்து வீசவில்லையோ - 2

இளங்கோ அடி கண்டு கடற்கலங்களோ துண்டு துண்டு - 2
வீசும் தென்றலும் சாட்சி வீழ்ந்த காலங்களும் சாட்சி - 2

மூசுமலை பேசவில்லையோ துறைமுகத்தில்
அனலெழுந்து வீசவில்லையோ - 2

சரணம் 1
{சீரோடு நாம் வாழ்ந்த காரைநகரிலே - வந்து
களமிட்டு நீயமர்ந்தாய் என்ன துணிவிலே} - 2
கரியபுலி வெடி சுமந்தான் தன் மடியினிலே - 2
பகை கையிலிருந்த கலங்கள் மூன்றும் கடலின் அடியிலே - 2

மூசுமலை பேசவில்லையே துறைமுகத்தில்
அனலெழுந்து வீசவில்லையோ - 2

சரணம் 2
{வெடிசுமந்து போகும் வேங்கை இடி முழங்கிடும் - போக
விடைகொடுத்த பெருந்தலைவன் விழி கலங்கிடும்} - 2
அலைகைகள் கூட கரும்புலியின் நினைவில் உருகிடும் - 2
அங்கே எரியும் தீயில் இளங்கோ உந்தன் முகம் தெரிந்திடும் - 2

மூசுமலை பேசவில்லையோ துறைமுகத்தில்
அனலெழுந்து வீசவில்லையோ - 2
இளங்கோ அடி கண்டு கடற்கலங்களோ துண்டு துண்டு - 2
வீசும் தென்றலும் சாட்சி வீழ்ந்த காலங்களும் சாட்சி - 2

மூசுமலை பேசவில்லையோ துறைமுகத்தில்
அனலெழுந்து வீசவில்லையோ - 2
ம்ம்ம்.... ம்ம்..... ம்..... ம்.........